தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை–600 006.

ந.க.எண். 29000/ ஐ / இ1 / 2020, நாள்.04.08.2021.

*****

பொருள்: பள்ளிக் கல்வி – மாநில நல்லாசிரியர் விருது வழங்குதல் – 2021–2022ஆம் கல்வியாண்டில் சிறப்பாகப் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கு டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது 05.09.2021 அன்று வழங்கிட ஏதுவாக ஆசிரியர்களைத் தேர்வு செய்து அவர்கள் சார்பான கருத்துருக்களை அனுப்பி வைக்கக் கோருதல் – சார்ந்து.

பார்வை: அரசாணை (1டி) எண். 122, பள்ளிக் கல்வித் (பொதுII)த் துறை, நாள். 03.08.2021.

*****

முன்னாள் "குடியரசுத் தலைவர் டாக்டர்.இராதாகிருஷ்ணன்" அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் பள்ளிக் கல்வித் துறையின் சார்பாக ஆசிரியர் தினவிழாவாகக் கொண்டாடப்பட்டு, அவ்விழாவில் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பாகப் பணிபுரியும் ஆசிரியர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருதான "டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது" வழங்கப்பட்டு வருகின்றது.

2. 2021ஆம் ஆண்டிற்கான டாக்டர். இராதாகிருஷ்ணன்விருது வழங்கும் விழா 05.09.2021 அன்று ஆசிரியர் தினவிழாவாக நடைபெற உள்ளது. எனவே, பார்வை (1)ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில், சிறப்பாகப் பணிபுரியும் ஆசிரியர்களைத் தேர்வு செய்து மாநில நல்லாசிரியர் விருதிற்குப் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் நேர்வில், மாவட்ட அளவில் குழு அமைத்து வருங்காலங்களில் எவ்வித புகார்களுக்கும், இடமளிக்காவண்ணம் பார்வையில் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, ஆசிரியர்களைத் தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்து, அவர்களின் விவரங்களையும் மற்றும் கருத்துருக்களையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் சரியாகப் பூர்த்தி செய்து 20.08.2021–க்குள் பள்ளிக் கல்வி இணைஇயக்குநர் (இடைநிலைக் கல்வி) அவர்களது பெயரிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines)

1. அனைத்து வகை ஆசிரியர்களும் குறைந்தபட்சம் 5 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.
2. மாநில பாட திட்டத்தின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகள் / ஆதிதிராவிட / பழங்குடியினர் நலத்துறை / பிற்பட்டோர் நலத்துறை / சமூக பாதுகாப்புத் துறை / நிதி உதவி பெறும் பள்ளிகள் / ஆங்கிலோ இந்திய பள்ளிகள் மற்றும் சுயநிதி / மெட்ரிக் பள்ளிகள் ஆகிய மேலாண்மைகளின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களும் விருதிற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
3. இவ்விருது வகுப்பறையில் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். அலுவலகங்களில் நிர்வாகப்பணி மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்க கூடாது.
4. கல்வியாண்டில் செப்டம்பர் 30ஆம் தேதிக்கு முன் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பரிந்துரை செய்யக்கூடாது. ஆசிரியர்கள் கல்வியாண்டில் குறைந்தது 4 மாதங்கள் (செப்டம்பர் 30ஆம் தேதிவரை –in Regular Service) பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். (மறுநியமன காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது).
5. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள் எவ்விதக் குற்றச்சாட்டிற்கும், ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படாதவராகவும், பொதுவாழ்வில் தூய்மையானவராகவும், பொது சேவைகளில் நாட்டம் கொண்டவராகவும், பள்ளி மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்தல், பள்ளி மாணவர் சேர்க்கை, தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துதல், கல்வித்தரத்தில் பின்தங்கிய மாணவர்களின் தரத்தை முன்னேற்ற பாடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
6. அரசியலில் பங்கு பெற்று அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய ஆசிரியர்களின் பெயர்கள் கண்டிப்பாகப் பரிந்துரைக்கப்படக் கூடாது.
7. கல்வியினை வணிகரீதியாகக் கருதி செயல்படும் ஆசிரியர்களையும், நடத்தை விதிகளுக்கு முரணாக இருக்கும் ஆசிரியர்களையும் இவ்விருதிற்குத் தகுதியற்றவர்களாகக் கருத்தப்பட வேண்டும்.
8. சிறந்த முறையில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களான ஓவிய ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் மற்றும் மாற்றுத் திறன் ஆசிரியர்களில் தகுதியானவர்களையும் விருதிற்குப் பரிந்துரைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டும்.
9. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்களின் கருத்துருக்கள், பெயர்பட்டியலினை மாவட்டத் தேர்வுக்குழுத் தலைவர் தமது சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். தேர்வுக்குழு உறுப்பினர்களும் இது தொடர்பாக மந்தணம் காத்திடல் வேண்டும்.
10. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்காக வரையறை செய்யப்பட்ட படிவத்தில் மட்டுமே ஆசிரியர்களின் கருத்துருக்கள் அனுப்பப்படல் வேண்டும்.

11. ஆகஸ்டு மாதம் 20ஆம் தேதிக்குள் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பட்டியல் தயார் செய்து 1:2 என்ற வீதத்தில் தேர்வு செய்து, நல்லாசிரியர் விருதிற்கான ஆசிரியர்களின் கருத்துருக்களில் விருதுக்குரிய சிறப்புத் தகுதிகளுக்கான ஆதாரச் சான்றுகளுடன் இணைத்து சாதாரண புத்தக வடிவில் தயாரித்து ஒரு நகல் மட்டும் பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக்கல்வி) அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
12. வருவாய் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களைத் தேர்வு செய்து பரிந்துரை செய்யப்படும் பொழுது, அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் அனைத்துப் பள்ளிகளையும் உள்ளடக்கியதாக உள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
13. மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய விருது பெற்ற எந்த ஆசிரியரையும் பரிந்துரை செய்தல் கூடாது.
14. கோவிட் பெருந்தொற்று காலத்தில் இணையவழி கல்வி உள்ளிட்ட மாணவர்களை நேரடியாக சென்றடையும் வகையில் கல்விப் பணியாற்றியிருக்க வேண்டும். கோவிட் பெருந்தொற்று காலத்தில் மேற்கூறிய வழிகளில் கல்விப்பணி ஆற்றாத ஆசிரியர்களை அறவே தவிர்க்க வேண்டும்.
15. மாவட்டத் தேர்வுக் குழுவால் இறுதி செய்யப்பட்ட ஆசிரியர்களின் சார்பான கருத்துருக்கள் ஒரு நகல் பதிவு அஞ்சல் மூலம், சென்னை-6, பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலைக் கல்வி) அவர்களது பெயரிட்ட உறையில் "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" "மந்தனம்" எனக் குறிப்பிட்டு வரும் **ஆகஸ்டு 20ஆம் தேதிக்குள்** அனுப்பி வைக்க அனைத்து ஆய்வு அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இணைப்புப் படிவத்தை முழுவதுமாகப் பூர்த்தி செய்து, பள்ளிக் கல்வி ஆணையரக **'ஐ'** பிரிவு மின்னஞ்சல் (isec.tndse@nic.in) முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.
16. பரிந்துரைக்கப்பட்ட ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலை மாவட்டத் தேர்வுக்குழுத் தலைவர் ரகசியம் காத்து, தனது சொந்த பொறுப்பில் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

**இணைப்பு :**

1. அரசாணை எண்.122 , பள்ளிக் கல்வித் (பொதுII) த் துறை, நாள். 03.08.2021.
2. படிவம்

4/8/21

**பள்ளிக் கல்வி ஆணையருக்காக**

4/8/21

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்விஅலுவலர்கள்.

**நகல் :**

1. அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித் துறை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது,
2. இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-6.
3. இயக்குநர், மெட்ரிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை -6.

**டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது 2021 - 2022**

| வ. எண். | ஆசிரியர் பெயர், பதவி மற்றும் பள்ளி முழு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | பிறந்த தேதி | ஓய்வு பெறும் நாள் | 31.05.2020 வரை முறையான பணிக்காலம் | கடந்த 5 ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை முன்னேற்ற விவரம் | ஆசிரியரது சிறப்பு தகுதிகள் கல்வி மற்றும் பள்ளி வளர்ச்சிக்கென ஆசிரியர் மேற்கொண்ட சிறப்புப் பணிகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**கணினியில் தட்டச்சு செய்பவர் கவனத்திற்கு :**

1. டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது பெறுவதற்காக வடிவமைக்கப்பட்டு இத்துடன் இணைத்துள்ள படிவத்தில் கோரப்பட்டுள்ள விவரங்களை முழுமையான வடிவில் தமிழ் Font "மருதம்" (TAU-Marutham)ல் EXCEL Format-ல் மட்டுமே தட்டச்சு செய்து பள்ளிக் கல்வி ஆணையரக **'ஐ'** பிரிவு மின்னஞ்சல் (isec.tndse@nic.in ) முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.
2. திரு. / திருமதி. / செல்வி, சகோதரர், சகோதரி மற்றும் இது தொடர்பாக உள்ள அடைச்சொல்லைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
3. பள்ளியின் பெயர் முகவரியினை எக்காரணம் கொண்டும் சுருக்காமல் தெளிவாகப் புரியும் வகையில் தெளிவாக எழுதிடவும், கணினியில் தட்டச்சு செய்திடவும் வேண்டும்.
4. பள்ளியின் முழு முகவரியினைக் குறிப்பிடும் போது ஒன்றியம், ஊராட்சி, மாவட்டம் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
5. தேர்வு செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் தலைப்பெழுத்தினைத் (Initial) தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
6. சிறப்புத் தகுதிகள் என்ற இடத்தில் ஆசிரியர்களின் அனைத்து சிறப்புத் தகுதிகளையும் தெளிவாக தமிழில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.